# உனது பெயர் என்ன?

3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுடனான பாலர்பள்ளி (Spielgruppe)பேசும்படம்

பாலர்பள்ளி நிர்வாகியுடனான நேர்காணல் *(Interview mit der Spielgruppenleiterin)*

நீ Dübendorf இல் உள்ள பாலர்பள்ளியை நீண்டகாலமாக நிர்வகிக்கின்றாய். ஏன் பாலர்பள்ளி முக்கியம் என்று நீ நினைக்கின்றாய்?
இன்றைய காலகட்டத்தில் அனேகமான குழந்தைகள் சிறியகுடும்பத்தில் தனித்தன்மையுடன் வளர்கின்றார்கள். ஆரம்பகாலங்களில் பெரியகுடும்பங்களில் குழந்தை வளர்ந்ததால், அது பெரியவர்களுடனான தொடர்புகளை கூடுதலாகப் பெற்றிருந்தது. அது தனியாகவே வெளியேசென்று அங்கு மற்றக் குழந்தைகளைச் சந்திக்கும். இக்காலகட்டத்தில் தாய்தான் எல்லாவற்றையும் தனியாக ஒழுங்குசெய்யவேண்டிய கட்டாயமாகவுள்ளது. வெளியுலகில் நிறைய ஆபத்துக்கள் இருக்கின்றன.
நான் ஆரம்பகாலத்தில் தற்போது பாலர்பள்ளி அமைந்துள்ள இந்தவீட்டிலும் இந்தத் தோட்டத்திலும்தான் அதிகமாக இருந்திருக்கின்றேன். ஏனெனில் இங்குதான் எனது தாத்தாபாட்டி வாழ்ந்தார்கள். எங்களுக்குப் பலதரப்பட்ட வசதிகள் இருந்தன. நாங்கள் வீதிகளில் விளையாடக்கூடியதாக இருந்தது. ஏனெனில் வாகனப்போக்குவரத்துப்பற்றிய பயம் யாருக்கும் இருந்ததில்லை. நாங்கள் தனியாகக் காடுகளுக்குச் சென்றோம். நாங்கள் நீரோடைக்கு அருகேயுள்ள சேற்றுமண்ணில் விளையாடினோம். இன்று அங்கே அணைக்கட்டுக்கள் எழுப்பப்பட்டுள்ளன. எல்லா இடங்களிலும் குழந்தைகளுக்கான சுற்றாடல் மட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. எங்களுக்கு ஆரம்பத்தில் கிடைத்த சுதந்திரம் இன்று தாய்மார்களால் குழந்தைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டு, தாய்மார் அனைத்தையும் ஒழுங்குசெய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. பாலர்பள்ளி இன்றையசூழலின் இதற்கான ஆதாரமென்றே சொல்லலாம். நான் பாலர்பள்ளியினூடாக குழந்தைகள் தன்னிச்சையாகச் செய்யமுடியாதவற்றை சுதந்திரமாகச் செய்வதற்கான சேவையை வழங்கவிரும்புகின்றேன். பாலர்பள்ளி தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் சிறியகுடும்பவட்டத்திலிருந்து வெளியுலகிற்கு வருவதற்கான வாய்ப்பாக அமைகின்றது. குழந்தைகளுக்குத் தேவையான உதவிகளும் கவனிப்பும் குழந்தைக்குக் குழந்தை வித்தியாசப்படும். அதற்குரிய சேவையினையே குழந்தைகளுக்கு அளிக்க நான் ஆசைப்படுகின்றேன். நான் குழந்தைகளுக்கு தேவைப்படும் உதவிகளை வழங்கி அதனூடாக அவர்கள் தங்களுக்குத்தாமே சுயமாக உதவிசெய்யும் ஆற்றலை வளக்க விரும்புகின்றேன். இதற்காக நான் அவர்களுக்கு கூடுதலான உபகரணங்களையும் சுதந்திரத்தையும் அவர்களுக்குரிய வரையறையையும் கொடுக்கின்றேன். நான் அவர்களுக்குக் கொடுக்கும் இந்த சலுகைகளில் இருந்து ஒவ்வொரு குழந்தையும் தனது நேரத்திற்கும் வளர்ச்சிக்குமேற்றவாறு தனக்குத் தேவையானதை எடுத்துக்கொள்ள முடியும். நான் நிகழ்ச்சிஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதில்லை. மாறாக குழந்தைகளைச் சுயமாகச் செய்யவிட்டு அதனை அவதானித்து அவர்களின் வளர்ச்சியில் சந்தோசமடைதலே எனது வேலையில் என்னை மிகவும் ஊக்கப்படுத்தும் விடயமாகும்.

கதைப்பவரின் வசனங்கள் *Text der Sprecherin (verteilt auf den Film):*

ஒவ்வொரு குழந்தையும் மற்றைய குழந்தைகளுடன் பழகுவதில் வேறுபாடுகள் உண்டு. ஒருசில குழந்தைகள் மிகவும் ஆர்வமாகப் பழகுவார்கள். மற்றைய சிலர் முதலில் கவனித்துப் பின்னர்தான் மற்றவர்களுடன் சேர்வார்கள்.

சிலசமயங்களில் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் பாலர்பள்ளி ஆரம்பம் இலகுவானதாக இருக்காது.

ஆசிரியை குழந்தையை பாலர்பள்ளியில் தனியாக விட்டுப்பழக்குவதற்கு உதவுவார். குழந்தையும் தாயும் பிரியும்போது ஏற்படும் வலியை அவரால் எடுக்கமுடியாது. ஆனால் அவர் குழந்தைக்கு ஆதரவாக இருப்பதாகக் காட்டி ஒரு குழந்தை பாலர்பள்ளியில் தாயின்றித் தனியாக இருக்கப் பழக உதவிசெய்வார். சிலவேளைகளில் குழந்தைக்கு பாலர்பள்ளிக்குச் செல்லும் பருவம் வந்தாலும் கூட அதற்கு அங்கு செல்வது கஷ்டமாக இருக்கும். எனவே முதலில் ஓரிரு மாதங்கள் அதை வீட்டில் வைத்து வேறொரு அல்லது இரண்டு குழந்தைகளுடன் ஒன்றாக இருக்கப் பழக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அனைவரும் நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும். குழந்தை இந்த வழியில் முன்னேறி வந்துவிட்டால் அது மேற்கொண்டு விளையாடவும் மற்றைய குழந்தைகளுடன் சேர்ந்து செயற்படுவதற்குமுரிய நுழைவாயில்கள் நிறையவே உண்டு.

தாய்மாருக்கும் மற்றவர்களைச் சந்தித்துப் புதிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் இடமாகப் பாலர்பள்ளி அமைகின்றது. தாய்மார்கள் மற்றவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலமும், குழந்தைகள் மற்றைய குழந்தைகளுடன் விளையாடுவதன் மூலமும் ஒருவருக்கொருவர் அறிமுகமாவார்கள்.

குழந்தைகள் ஒருவருக்கொருவர் உதவிசெய்வார்கள். ஒருவரிடமிருந்து மற்றவர் கற்றுக்கொள்வார். இதனூடாக அவர்கள் வளர்ச்சியடைவார்கள். குழந்தைகள் படிப்பதற்கும் செய்து பழகுவதற்கும் ஒருவருக்கொருவர் ஊக்கம் கொடுப்பார்கள்.

பாலர்பள்ளியில் குழந்தைகளுக்கு விளையாடுவதற்கும், ஒன்றாகச் சேர்ந்திருப்பதற்குமுரிய நண்பர்கள் கிடைப்பார்கள்.

பாலர்பள்ளியிலும் சோதனைக்குரிய காலங்களும் உண்டு. ஆனால் பெரியோர்கள் குழந்தைகளுக்குப் போதுமான நேர அவகாசத்தைக் கொடுத்தால் அவர்கள் தாங்கள் சுயமாகவே பிரச்சனைகளுக்குரிய தீர்வுகளைக் கண்டுபிடிப்பார்கள். சில சந்தர்ப்பங்களில் இது நமக்குக் கஷ்டமாக இருந்தாலும் நாங்கள் குழந்தைகள்மேல் நம்பிக்கை வைப்பதன் மூலம் அவர்கள் தங்கள் சொந்த அனுபவங்களிலிருந்து புதியதைக் கற்றுக்கொண்டு முன்னேற்றமடைவார்கள்.

ஒருதடவை நண்பராக இருப்பது, அடுத்த நிமிடம் புறக்கணிக்கப்படுவது, சிலசமயம் மற்றவர்களுக்குரியதைத் தீர்மானிப்பது, மற்றொருசமயம் மற்றவர்களுக்குக் கீழ்ப்படிவது என்று குழந்தையின் நிலை பாலர்பள்ளியில் விரைவாக மாறிக்கொண்டேயிருக்கும்.

குழந்தைகளுடன் தொட்டுப் பழகுவதற்கு ஒரு ஆசிரியை அவசியம் தேவை. இந்த வயதுள்ள குழந்தைகள் மொழியைவிட கைகள் மற்றும் அசைவுகளின் ஊடாகத்தான் கூடுதலான விடயங்களை உணர்ந்துகொள்வார்கள் (இதனால் ஜேர்மன்மொழி புரியாத வெளிநாட்டுப் பிள்ளைகளைக் கூட பிரச்சனையின்றி புரிந்துகொள்ளமுடியும்).

குழந்தைகள் பாலர்பள்ளியில் சந்தோசமாக இருந்தால் கூச்சசுபாவமுடைய குழந்தைகள்கூட துணிந்து எதையும் செய்ய முற்படுவார்கள்.

குழந்தைகளுக்குத் தேவையான உதவிகளும், கவனிப்பும், வழிநடத்தலும் குழந்தைக்குக் குழந்தை வித்தியாசப்படும். குழந்தை தன்னிச்சையாகச் செயற்படக்கூடிய ஆற்றலை வளர்ப்பதற்குத் தேவையான உதவிகளை ஆசிரியை வழங்குவார்.

குழந்தைகள் தங்களால் எதைத் தனியாகச் செய்யமுடியுமோ அதை பாதுகாப்பான ஒரு இடத்தில் செய்து பழகுவார்கள். அவர்களால் தாங்கள் எவ்வளவு செய்ய முடியுமென உணரமுடியும்.

கூடுதலான பாலர்பள்ளிகளில் தாயும் தந்தையும் மாறிமாறிக் குழந்தையுடன் இருப்பார்கள். இதனால் குழந்தைகள் பலதரப்பட்ட பெரியவர்களுடனான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளப் பழகும். பெற்றோர்கள் பாலர்பள்ளிநேரத்தில் தங்கள் குழந்தை மற்றவர்களுடன் விளையாடுவதை அமைதியாக இருந்து பார்க்கமுடியும்.

தாராளமாக விளையாடி முடித்திருப்பதுதான் வாழ்க்கையைத் தொடங்குவற்குரிய சிறந்தவழிமுறையாகும். விளையாடுவதே வாழ்க்கை! இதற்கு மிகவும் குறைந்த எளிமையான கருவிகள் மட்டுமே தேவை. இதனை ஒவ்வொருதடவையும் விருப்பத்திற்கேற்ப மாற்றியமைத்து புதிய விளையாட்டை உருவாக்கலாம்.

குழந்தைகளின் உடல் உள வளர்ச்சிக்கு பாலர்பள்ளிப் பருவத்தில் செய்யும் அசைவுகள் மிகமுக்கியமானதாகும்.

சிலசமயம் குழந்தைகள் அமைதியை விரும்புவதால் பின்னடைவார்கள். சலிப்புத்தன்மை ஏற்படும்போது புதிதாக ஒன்றைச் செய்துபார்க்கத் தூண்டும்.

குழந்தை தனது சுற்றாடலைத் தனது உணர்வுகள் மூலம் தெரிந்துகொள்ள முயற்சிக்கும். பிடிப்பதன் மூலமும் தொடுவதன் மூலமும் அறிந்துகொள்ளுதல் விளங்கிக்கொள்ளுதல் போன்றவற்றைக் கற்றுக்கொள்ளும்.

பாலர்பள்ளியில் கைவேலைப்பொருட்களை அழகாகவும் சரியாகவும் செய்வது முக்கியமல்ல. ஒரு விடயத்தைச் செய்வதிலும் செய்துபார்ப்பதிலும் உள்ள சந்தோசமும் அந்த அனுபவமும்தான் மிகவும் முக்கியமானதாகும்.

குழந்தைகள் சிரிப்பதற்கும் கோபப்படுவதற்கும் நட்புக்கொள்வதற்கும் சண்டைபிடிப்பதற்கும் திறமையாகச்செயற்படவும் ஒருசில நேரத்தில் ஒன்றுமே செய்யாமல் இருக்கவும் கூடுதலாகச் செய்து பழகவும் ஏற்ற சுதந்திரமான ஒரு இடத்தையளிக்க இன்று பாலர்பள்ளிகள் அவசியமாகும்.